Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 166/2016
Sessions prosecution
depositions of witness for — LW 8examined as PW1 chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 11.53am – 12.20pm |
| Name | : | திரு. டாக்டர்.நவநீதம்.என். |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24th day of September 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

1) நான் தற்போது ஒசூர் அரசு மருத்துவ மனையில் முதன்மை மருத்துவராக பணிபுரிந்து 30/06/2018 ல் பணி ஓய்வு பெற்று மெடிக்கல் பிரக்டிஸ் செய்து வருகிறேன். கடந்த 03/05/2003 ம் தேதி ஒசூர் அரசு மருத்துவ மனையில் முழு நேர பணியில் இருந்த போது மாலை 4.40 மணிக்கு செந்தாமரை (26) க.பெ. எழிலன் சிகிச்சைக்காக அடையாளம் தெரிந்த ஆண் நபர் தன்னை மாலை 3.30 மணிக்கு மத்தம் அருகே பெல்டால் தாக்கியதாக சொன்னார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தது. காயம் 1. 4X1 cm, தோலின் அடி வரை

கிளிந்த காயம் இருந்தது. 2. வயிற்றில் வலி இருப்பதாக சொன்னார். இவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். **மேலே கண்ட இரண்டு காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய காயச் சான்று அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** கடந்த 03/05/2003 ம் தேதி ஒசூர் அரசு மருத்துவ மனையில் முழு நேர பணியில் இருந்த போது மாலை 4.35 மணிக்கு பார்த்தசாரதி (27) த.பெ. ரகுபதி தென்பென்னையில் இருந்து சிகிச்சைக்காக வந்து தன்னை அடையாளம் தெரிந்த 6 ஆண் நபர்கள் அதே நாள் மாலை 3.30 மணிக்கு நத்தம் அருகே கை மற்றும் பெல்டால் தாக்கியதாக சொன்னார். மேற்படி நபரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தது. 1. 10 cmX2 cm சிராய்ப்பு காயம் இடது முன் மண்டையில் இருந்தது. 2. இடது காரை எலும்புக்கு அருகே நிறைய சிராய்ப்பு காயங்கள் இருந்தது. 3. 3cmX2 cm வலது புருவத்திற்கு மேல் சிராய்ப்பு காயம் இருந்தது. 4.3cmX3 cm இடது தோல் பட்டையின் மேல் சிராய்ப்பு காயம் இருந்தது. **மேலே கண்ட நான்கு காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய காயச் சான்று அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** கடந்த 03/05/2003 ம் தேதி ஒசூர் அரசு மருத்துவ மனையில் முழு நேர பணியில் இருந்த போது மாலை 4.30 மணிக்கு எழிலன் (26) த.பெ. சமரசம் சி.சி. நகரில் இருந்து சிகிச்சைக்காக வந்து தன்னை அடையாளம் தெரிந்த 6 ஆண் நபர்கள் அதே நாள் மாலை 3.30 மணிக்கு மத்தம் அருகே பெல்ட், சைக்கில் செயின் மற்றும் கட்டையால் தாக்கியதாக சொன்னார். மேற்படி நபரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தது. 1. மேல் பகுதி கிளிக்கும் பல் அருகே ஒரு கன்றிய காயம் இருந்தது. 2. இடது தோல் பட்டை மூட்டு கீழே இறங்கி இருந்தது. 3. பல்லால் கடித்த காயம் இடது காதில் இருந்தது. 4, 3cmX1cm கன்றிய காயம் இடது காரை எலும்பு அருகே இருந்தது. 5. 3cmX1cm கன்றிய காயம் இரண்டு தோல் பட்டைக்கு நடுவில் இருந்தது. இவரை பரிசோததித்த போது மின்சாரம் இல்லாததால் எக்ரே எடுக்க முடியவில்லை. மேல் சிகிச்சைக்காக தர்மபுரி அரசு மருத்துவ மனையில் உள் நோயாளியாக 11288 என்ற எண்ணில் 05/05/2003 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற் சொன்ன நபரை பரிசோததித்ததில் 2வது காயம் கொடுங்காயம் என்றும், மற்ற நான்கு காயங்கள் சாராதாரண காயம் என்றும் சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச் சான்று அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

வலி என்பது நோயாளியின் உணர்வு என்றால் சரிதான். சிராய்ப்பு காயங்கள் அனைத்தும் சொர சொரப்பான பகுதியில் உராய்வு ஏற்படும் போது ஏற்பட கூடிய காயங்கள் என்றால் சரிதான். வீக்கமான காயங்கள் பிளண்டான பகுதியில் இடித்து கொள்வதால்

ஏற்படும் என்றால் சரிதான். தோல் பட்டையில் உள்ள மூட்டு அளவுக்கு அதிகமான எடையை தூக்கும் போது விலக வாய்ப்பு உள்ளது என்றால் இல்லை. 3 வது நபரின் எக்ஸ்ரேவை தர்மபுரி அரசு மருத்துவ மனையில் இருந்து என்னிடம் கொடுக்கவில்லை என்றும் அந்த ஆவணத்தை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துரை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.